# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2021

இப் பரீட்சைக்காக நிகழ்நிலை (Online) முறைமையில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் (https://donets.lk) அல்லது நிகழ்நிலை பரீட்சை வலைத்தளத்தில் (https://onlineexams.gov.lk/eic) அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் செல்லிடத் தொலைபேசி செயலிக்குள் (DoE Mobile app) நுழைவதன் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

இப்பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தோற்றவுள்ளவர்களின் விண்ணப்பங்கள் 2021 ஜூலை மாதம் 05ஆம் திகதியிலிருந்து ஜூலை 30 நள்ளிரவு 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை முழுமையாக நன்கு வாசித்து விளங்கிக்கொண்டு மேற்படி வலைத்தளத்தினுள் நுழைந்து நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தெரிவு செய்த நகரத்தையும் பாடங்களையும் குறிப்பிடும் போது சரியாகக் குறிப்பிட வேண்டுமென்பதில் விசேட கவனஞ் செலுத்த வேண்டும். ஒரு பரீட்சார்த்திக்கு ஆகக்கூடியது பிரதான பாடங்களில் 03 பாடங்களுக்கு மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படும். அதற்கு மேலதிகமாக அவசியமேற்படுமிடத்து பாட இலக்கம் 12 - பொதுச் சாதாரண பரீட்சைக்கும், பாட இலக்கம் 13 - பொது ஆங்கிலம் பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும்.

**இம்முறை பரீட்சைக்காக விண்ணப்பிக்கும்போது இரண்டு பிரதான படிமுறைகளை பின்பற்றல் வேண்டும்.**

1வது படிமுறை - விவரங்களை உள்ளடக்கி ‘குறிப்பு இலக்கத்தை’ (Reference number) பெற்றுக்கொள்ளல். உங்களது தனிப்பட்ட விவரங்களையும் பரீட்சை தொடர்பான விவரங்களையும் பாடங்கள் தொடர்பான விவரங்களையும் கட்டணம் செலுத்தும் முறை தொடர்பான விவரங்களையும் உள்ளடக்குக. நீங்கள் அஞ்சல் அலுவலகம் மூலம் கொடுப்பனவு செய்யின் குறிப்பு இலக்கம் (Reference number) ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2வது படிமுறை - பரீட்சைக் கட்டணம் செலுத்துதலும் விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்தலும்

தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ‘குறிப்பு இலக்கத்தை’ (Reference number) அஞ்சல் அலுவலகத்தில் வழங்கி பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியில் (SMS) உள்ள இணைப்பை (link) செயற்படுத்தியோ அல்லது மீண்டும் வலைத்தளத்தில் நுழைந்தோ உங்களுக்கு கிடைக்கப்பெறும் "Download AL 2021 Application" ஐ தெரிவு செய்து (Click) உங்களது விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும்.

நீங்கள் வங்கி அட்டை மூலம் கட்டணம் செலுத்துவதாயின் அது சரியாக நிறைவுற்ற பின்னர் மேலேயுள்ள (icon) ஐ பயன்படுத்தி விண்ணப்பத்தை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**பரீட்சைக் கட்டணத்தை அஞ்சல் அலுவலகம் மூலம் அல்லது எந்தவொரு வங்கி அட்டைகள் மூலமாகவும் செலுத்த முடியும்.**

## 02. விண்ணப்பப்படிவம்

அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அதனை அச்சுப்பிரதியெடுத்துக் கொள்ளவும். அச்சுப் பிரதியை தங்கள் பொறுப்பில் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதுடன் அவசியமேற்படுமிடத்து அதனை சமர்ப்பிப்பதற்கு தயாராகவும் இருத்தல் வேண்டும்.

**அரச பாடசாலையில் கற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விண்ணப்பிக்குமிடத்து பரீட்சைப் பெறுபேற்றை இரத்து செய்து எதிர்வரும் காலங்களில் பரீட்சைகளுக்குத் தோற்றத் தடை விதிக்கப்படும்.**

### 2.1 முறைமைக்குள் பிரவேசித்தல் - 1வது படிமுறை

(i) விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

✦ உத்தியோகபூர்வ (https://donets.lk) எனும் வலைத்தளத்தில் நுழைந்து “எமது சேவை” என்பதின் கீழுள்ள “நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)” ஐ Click செய்க.

✦ பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (mobile application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து “நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)” ஐ Click செய்க. அல்லது

✦ https://onlineexams.gov.lk/eic I Click செய்து நுழைக.

(ii) "G.C.E. AL - 2021 Application for student Registration" (Private) எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்வதன் மூலம் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

(iii) உங்களின் தனிப்பட்ட தகவல்கள், தோற்றவுள்ள நகரம், மொழிமூலம் என்பவற்றை தெரிவு செய்த பின்னர் தோற்றவுள்ள பாடங்களை தெரிவு செய்து உள்ளடக்க முடியும்.

(iv) **(அ) (13) பொது ஆங்கிலம் :**

மூன்று பிரதான பாடங்களுடன் பொதுச் சாதாரண பரீட்சைக்கு மேலதிகமாக பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும். இப்பாட பெறுபேறு பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு பயன்படுத்தப்படமாட்டாது. இப் பாடத்திற்காகப் பெறும் தரம் க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைப் பெறுபேற்று சான்றிதழில் குறிப்பிடப்படும்.

**(ஆ) (12) பொதுச் சாதாரண பரீட்சை :**

எவராயினும் ஒரு விண்ணப்பதாரி இலங்கையின் பல்கலைக்கழகமொன்றிற்கு அனுமதி பெற எதிர்பார்த்திருப்பின் கட்டாயமாக குறைந்தது 30 புள்ளிகளைப் பெறல் வேண்டும். இதற்கு முன்னர் (உ.தர)ப் பரீட்சைக்குத் தோற்றி அவர் 30 புள்ளிகளுக்கு அதிகம் பெற்றிருப்பாராயின் மீண்டும் தோற்ற வேண்டிய அவசியமில்லை.

**(இ) செய்முறைப் பரீட்சையுடன் கூடிய பாடங்கள்**

பாட இலக்கம் 28, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 65, 66 ஆகிய பாடங்களுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இவ்விரு வகைப் பரீட்சைகளுக்கும் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் இப்பாடங்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வழங்கப்படும். செய்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டையில் குறிப்பிட்ட திகதியில் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். உரிய தினத்தில் தோற்றத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வேறு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

**(ஈ)** கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2016/13 இலக்கமும் 2016.4.26ஆம் திகதியுடைய சுற்றுநிருபத்திற்கமைவாக பாடங்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். அச் சுற்றுநிருபத்திலுள்ள பாடத்துறைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடத்துறைகளுடன் இணைந்தொழுகாத ஏனைய பாடச்சேர்மானங்களைத் தெரிவுசெய்யும் பட்சத்தில், விண்ணப்பதாரிகள் “குறித்த பாடத்துறை ஒன்றில் அடங்காத” (Non stream) என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுகையில் “நாடளாவிய தரம் (Island Rank) மற்றும் “மாவட்ட தரம்” (District Rank) வெளியிடப்பட மாட்டாது. அச்சுற்றுநிருபத்துக்கு இணைந்தொழுகாத பாடச்சேர்மானங்களைத் தெரிவு செய்வதால் பரீட்சார்த்திகள் முகங்கொடுக்க வேண்டியேற்படும் பிரச்சினைகள் தொடர்பான எந்த பொறுப்புக்களையும் இத்திணைக்களம் ஏற்றுக்கொள்ளாது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

2.2 2021.07.30ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியாது. **குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் நிகழ்நிலை முறைமையில் விண்ணப்பிக்க முடியாது.**

2.3 **ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப முடியும். தகவல்களை மாற்றி ஒன்றுக்குமேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும் சந்தர்ப்பத்தில் சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இப்படியான முறைகேடான செயல் தெரியவரின் பெறுபேறு இரத்துச் செய்யப்படுவதுடன் தண்டனைக்குள்ளாவார்.**

## 03. பரீட்சைக் கட்டணம் செலுத்துதலும் விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் (Download) செய்தலும் - 2வது படிமுறை

பரீட்சைக் கட்டணம் அஞ்சல் தபால் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Credit / Debit Payment) மூலமோ மேற்கொள்ள வேண்டும்.

3.1 அஞ்சல் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வீர்களாயின் "Payment method" இன் கீழுள்ள "Pay by postal Department" எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்க. உங்களுக்கு அங்கு கிடைக்கப்பெறும் ‘குறிப்பு இலக்கத்தை’ (Reference number) தபால் அலுவலகத்தில் வழங்கிய உரிய தொகையை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை உங்கள் வசம் வைத்துக்கொள்ள வேண்டும்.

பணத்தை செலுத்திய பின்னர் பரீட்சைத் திணைக்கள உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் நுழைந்து உங்கள் விண்ணப்பத்தை தரவிறக்கம் (download) செய்ய முடியும்.

**கொடுப்பனவு பூர்த்தியடைந்த பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியிலுள்ள இணைப்பை (Link) செயற்படுத்துவதன் மூலம் உரிய விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும்.**

3.2 வங்கி அட்டைகள் (Credit / Debit card) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by credit / debit" நிகழ்ச்சியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கட்டணம் (ரூபா) | 150/- | 200/- | 250/- | 350/- | 400/- |

04. நீங்கள் விண்ணப்பித்ததற்கு அமைய பரீட்சை அனுமதிப்பத்திரம் உங்களுக்கு கிடைக்கப்பெறும். பரீட்சை அனுமதி அட்டையில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டியிருப்பின் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைத்த பின்னர் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தினுள் நுழைந்து (07) நாட்களுக்குள் உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

05. உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தங்களுக்கு கிடைக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்திற்குமிடையே வேறுபாடுகள் இருப்பின் அது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் உங்களுக்கு அனுமதிப்பத்திரம் கிடைத்தவுடன் உடனடியாக கீழுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலமாக பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேறு கிளைக்கு தொடர்பு கொள்ள வேண்டும்.

**06. சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் தமது நிரந்தர வதிவிட முகவரியையும் தமது தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட வேண்டுமென்பதுடன் தாம் கல்விகற்ற தனியார், சர்வதேச பாடசாலைகளின் பெயர், முகவரியையோ தொலைபேசி இலக்கத்தையோ குறிப்பிடலாகாது.**

## 07. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்

பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும் எல்லா சந்தர்ப்பத்திலும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தை கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை கிராம அலுவலர் ஊடாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு தாமதமின்றி சமர்ப்பித்து தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**08.** இப் பரீட்சை தொடர்பாக அரச பாடசாலைகளிலிருந்தும்/ கட்டணம் அறவிடும்/ அறவிடாத அரச அனுமதி பெற்ற தனிப்பட்ட பாடசாலைகளிலிருந்தும்/ அனுமதி வழங்கப்பட்ட பிரிவெனாக்களிலிருந்தும் முதலாவது, இரண்டாவது முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும். அவ்வாறு கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படும்.

**09.** இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் இருப்பின் "Candidats with Special Education Needs " இன் கீழே தகவல்களை பூர்த்தி செய்வது கட்டாயமானது.

**குறிப்பு :** இப்பரீட்சை தொடர்பாக செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கப்பட மாட்டாதென்பதுடன் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும் மாட்டாது.

**இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து எந்த ஒரு வினாப்பத்திரத்திற்கும் அல்லது ஒரு வினாப்பத்திரத்தின் ஒரு பகுதிக்கும் தோற்றாத பரீட்சார்த்திகள் மட்டும், பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகளாகக் கருதப்படுவார்கள். அத்தகைய பரீட்சார்த்திகளின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பரீட்சை எத்தனம் (Attempt) செல்லுபடியற்றதாகிவிடாது என்பதால் அதற்காக எந்த வைத்திய அத்தாட்சிப் பத்திரமும் அவசியமற்றது. இவர்கள் தமது அனுமதி அட்டையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதே எந்த ஒரு பாடத்திற்கும் பரீட்சார்த்தி தோற்றவில்லை என்பதனை நிரூபிப்பதற்கான ஒரே ஆதாரமாகும். இது தொடர்பாக வைத்திய சான்றிதழ்களையோ கடிதங்களையோ திணைக்களத்திற்கு அனுப்புவது அவசியமற்றது.**

மேற்படி விடயங்கள் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் கீழுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலமாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 011- 2784208 / 011-2784537 / 011-2786616
தொலைநகல் இலக்கம் : 011 - 2784422

**தொடர்பு எண் : 6/3/AL/2021**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**த.பெ.1503, கொழும்பு.**
2021.07.05

**பி.சனத் பூஜித**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2021
### விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான தொழில்நுட்ப வழிகாட்டல்கள்

### 01. முறைமைக்குள் பிரவேசித்தல்

1.1 விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

✦ உத்தியோகபூர்வ (https://donets.lk) எனும் வலைத்தளத்தில் நுழைந்து “எமது சேவை” என்பதின் கீழுள்ள “நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)” ஐ Click செய்க. அல்லது

✦ பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியை (mobile application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து “நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)” ஐ Click செய்க. அல்லது

✦ https://onlineexams.gov.lk/eic ஐ Click செய்து நுழைக.

1.2 "Online Application" எனும் Tile ஐத் தெரிவு செய்க (Click).

1.3 G.C.E. (AL) – 2021 - Student Registration (Private) நிகழ்ச்சியைத் தெரிவு செய்வதன் மூலம் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

1.4 முதலில் உங்களின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை உள்ளடக்கி பதிவு செய்யவும்.

1.5 தேசிய அடையாள அட்டை இல்லையெனின் அதற்கு பதிலாக 011- 2784208 / 011-2784537 / 011-2786616 தொலைபேசி இலக்கங்களை தற்காலிகமாக பயன்படுத்தவும்.

1.6 தேசிய அடையாள அட்டை இலக்கத்தை செலுத்திய பின்னர் தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள குறுஞ்செய்தியில் (SMS) குறிப்பிடப்பட்டுள்ள குறியீட்டு இலக்கத்தைப் (OTP) பயன்படுத்தி முறைமைக்குள் பிரவேசிக்கவும்.

1.7 அங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து மேலும் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக "Instructions" எனும் (Button) பொத்தானை தெரிவு செய்யவும் (Click). பொது அறிவுறுத்தல்களையும் தொழில்நுட்ப அறிவுறுத்தல்களையும் உள்ளடக்கிய அறிவுறுத்தற் காணொளியை (Video Clip for Instructions) பார்த்த பின்னர் "Next" ஐ Click செய்து விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்ய தொடங்குக.

1.8 உங்களின் தனிப்பட்ட தகவல்கள் (தொடர் இல 02), பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாவட்டம், நகரம், மொழிமூலம் (தொடர் இல 03) தெரிவு செய்த பின்னர் நீங்கள் தோற்றவிருக்கும் பாடங்களை தெரிவு செய்து (தொடர் இல 04) என்பவற்றை உள்ளடக்குக.

### 02. Personal Information

2.1 Full Name in English

பிறப்புச்சான்றிதழிலுள்ளவாறு முழுப்பெயரை ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் எழுதுதல் வேண்டும். முதலெழுத்துக்களுடன் பெயரை எழுத வேண்டாம்.

உதாரணம் : ANUSHA THANGARAJ

முறைமைக்குள் உள்ளடக்க முடியாத, 90 எழுத்துக்களுக்கும் மேற்பட்ட பெயராயின் விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் மேலே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளவும்.

2.2 NIC No : நீங்கள் முறைமைக்குள் பதிவு செய்த தேசிய அடையாள அட்டை இலக்கம் காண்பிக்கப்படும். அதனை நன்கு பரீட்சித்து சரியானதென உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

2.3 Date of Birth

பிறப்புச்சான்றிதழிலுள்ளவாறு பிறந்த திகதியை தெரிவு செய்து உள்ளடக்கவும்.

2.4 Gender

ஆண் / பெண் என்று குறிப்பிடுவதற்கு ஆண் எனின் "Male" எனவும் பெண் எனின் "Female" எனவும் தெரிவு செய்க.

2.5 மின்னஞ்சல் முகவரி (Email Address) :
தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (செல்லிடம்) (mobile number) :
தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (நிரந்தரமான) (Telephone Home) :
} இத்தகவல்களை உள்ளடக்கவும்.

2.6 Private Address

முகவரி : நிரந்தர முகவரியை குறிப்பிட வேண்டும்.

**தற்கால வதிவிட முகவரியையோ/ தனியார்/ சர்வதேச பாடசாலையின் முகவரிகளையோ குறிப்பிட வேண்டாம்.**

2.7 தனிப்பட்ட முகவரியை உள்ளடக்கும் போது தபால் முகவரியை தனியாக குறிப்பிடவும். தபால் நகரத்தை இரண்டு தடவை குறிப்பிடுவதை தவிர்க்கவும்.

உதாரணம்: முகவரி: இல 129/7, கடவத்தை வீதி, தெஹிவளை எனின்,
Private Address : No. 129/7, Kadawatha Road,
Postal Town : Dehiwala

**அடுத்த செயன்முறைக்காக Next பொத்தானை அழுத்தவும்**

### 03. Exam Report

3.1 District and Town you expect to sit for the examination

**தெரிவு செய்த மாவட்டமும் நகரமும்**

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மாவட்டத்தை தெரிவு செய்த பின்னர் அதற்குரிய நகரத்தை பட்டியலிலிருந்து தெரிவு செய்க. தவறான நகரத்தை தெரிவு செய்யின் மிகத்தூரத்திலுள்ள பரீட்சை நிலையம் கிடைக்கப்பெறலாம். உரிய நகரம், நகர இலக்கம் என்பவற்றைக் கொண்ட பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நீங்கள் விண்ணப்பித்த பரீட்சை நிலையம் பின்னர் மாற்றம் செய்யப்பட மாட்டாது.

3.2 Number of Attempt

நீங்கள் எத்தனையாவது தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகிறீர்கள் என்பதை குறிப்பிடவும்.

3.3 Special needs applicant : (Vision/ hearing/ other)

3.3.1 விசேட தேவையில்லையாயின் "No" என்பதைத் தெரிவு செய்க.

3.3.2 நீங்கள் ஏதேனும் ஒரு விசேட தேவையுடைய விண்ணப்பதாரியாயின் "yes" என்பதைத் தெரிவு செய்க. தெரிவு செய்த பின்னர் கிடைக்கப்பெறும் பின்வரும் விடயங்களில் பொருத்தமானதின் கீழ் விவரங்களை உள்ளடக்குக.

✦ Type of the disability (குறைபாட்டின் தன்மை)

Braille - பிரேல் விண்ணப்பதாரி
Hearing - கேட்டற் குறைபாடுடைய விண்ணப்பதாரி
Vision - பார்வைக் குறைபாடுடைய விண்ணப்பதாரி
Body functions/ structure - உடற் குறைபாடுடைய விண்ணப்பதாரி
Other - வேறு குறைபாடுடைய விண்ணப்பதாரி

✦ If special center required , select it - விசேட பரீட்சை நிலையத்தை விண்ணப்பிப்பதாயின் அதனைத் தெரிவு செய்க.

✦ More details about disability - குறைபாடு தொடர்பான வேறு விவரங்கள்

**அடுத்த செயன்முறைக்காக Next பொத்தானை அழுத்தவும்**

## 04. Subject Infomation

2021ஆம் ஆண்டு பரீட்சைக்கு அங்கீகரிக்கப்பட்ட பாடங்களும் ஊடகமொழியும்

4.1 Prefered medium of Language

தோற்றும் மொழிமூலம் : தோற்றுவதற்கான மொழிமூலத்தை தெரிவு செய்க. நீங்கள் இரண்டு மொழிமூலத்தில் தோற்றும் பரீட்சார்த்தியாயின் ஆங்கில மொழிமூலத்திற்கு மேலதிகமாக பிரதான மொழிமூலத்தில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும்.

4.2 கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2016/13 இலக்கமும் 2016.4.26 ஆம் திகதியுடைய சுற்றுநிருபத்திற்கமைவாக மூன்று பிரதான பாடங்களுக்கு மேலதிகமாக பாட எண் 13 - பொது ஆங்கில பாடத்திற்கும் பாட எண் - 12 பொது சாதாரணப் பரீட்சைப் பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும்.

4.3 ஒவ்வொரு பாடத்திற்குமுரிய மொழிமூலம் தங்களால் தெரிவு செய்யப்படல் வேண்டும். தேவையாயின் இரு மொழிமூலத்திலும் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

- ✦ சிங்களம் / ஆங்கிலம்
- ✦ தமிழ் / ஆங்கிலம்

எக்காரணத்தின் பொருட்டும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிமூலங்களிலும் ஒரே தடவையில் தோற்ற முடியாது.

4.4 **மிக முக்கியம் :**

i. பௌதிக விஞ்ஞான பாடத்துறையின் கீழ் 07 - கணித பாடத்தைத் தெரிவுசெய்ய முடியாது.

ii. பாட இல 14, 15, 16, 17, 18, 19 ஆகிய பாடங்களுள் ஒன்றிற்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

iii. (65) பொறியியற் தொழில்நுட்பவியல் மற்றும் (66) உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய இரண்டு பாடங்களிலும் ஒரு பாடத்திற்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

iv. (65) பொறியியற் தொழில்நுட்பவியல் பாடத்திற்கோ (66) உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்திற்கோ விண்ணப்பிப்பவர்கள் மாத்திரம் (67) தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானப் பாடத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

v. சமயம் மற்றும் நாகரிகம் ஆகிய பாடங்களில் ஏதாவதொரு சமயத்தினை பரீட்சார்த்தி தெரிவு செய்வாராயின் அதனோடு தொடர்புபட்ட நாகரிகப் பாடத்தினை அவர் தெரிவு செய்ய முடியாது. அதே போன்று நாகரிகப்பாடத்தினை தெரிவு செய்வாராயின் அதனுடன் தொடர்புடைய சமய பாடத்தை தெரிவு செய்ய முடியாது.

vi. நடனம் - பாட இல 52 இற்கு விண்ணப்பிக்கும்போது நீங்கள் கற்ற நடன வகையைக் குறிப்பிடவும். (இது செய்முறைப் பரீட்சைக்கு வகைப்படுத்தலுக்காக மட்டுமே)

vii. 54 - கீழைத்தேய சங்கீத பாடம் சிங்கள மொழி மூலத்தில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

viii. 55 - கர்நாடக சங்கீத பாடம் தமிழ் மொழி மூலத்தில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

ix. 56 - மேலைத்தேய சங்கீத பாடம் ஆங்கில மொழி மூலத்தில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

x. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை பின்னர் மாற்றம் செய்வதற்கோ அல்லது பரீட்சை மண்டபத்தில் பாட மாற்றங்கள் செய்வதற்கோ அல்லது மேலதிக பாடங்களுக்குத் தோற்றுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது. அவ்வாறு மாற்றம் செய்து தோற்றியிருப்பின் அப்பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இரத்துச்செய்யப்பட வேண்டி நேரிடும்.

4.5 **Common General Test**

சாதாரண பொதுப் பரீட்சை : விண்ணப்பிப்பதாயின் "Common General Test" எதிரேயுள்ள Yes ஐத் தெரிவு செய்து மொழிமூலத்தையும் தெரிவு செய்க.

4.6 **General English**

பொது ஆங்கிலம் : விண்ணப்பிப்பதாயின் "General English" எதிரேயுள்ள Yes ஐத் தெரிவு செய்க.

**தொடர்ந்து அடுத்த படிமுறைக்காக Submit ஐ பயன்படுத்துக.**

4.7 பாடங்களைத் தெரிவு செய்த பின்னர் உரிய பாடங்களுக்கு உரித்தான பாடத்துறை (Stream) உங்களுக்கு திரையில் காட்டப்படும். அது தொடர்பாக உங்கள் அவதானத்தை செலுத்தவும்.

Submit ஐ Click செய்த பின்னர் Exam Application Summary ஐ சரிபார்க்குக. மாற்றம் ஏதும் செய்ய வேண்டியிருப்பின் Reset the Exam Application" ஐ தெரிவு செய்து தேவையான மாற்றங்களை மேற்கொள்க. "Payment method" செய்த பின்னர் எந்த மாற்றங்களும் செய்ய முடியாது

## 05. Payment Methods

பரீட்சைக் கட்டணம் அஞ்சல் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Credit / Debit Payment) மூலமோ மேற்கொள்ள வேண்டும்.

5.1 அஞ்சல் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வீர்களாயின் 'Payment method" இன் கீழுள்ள "Pay by postal Department" எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்க. **அங்கு கிடைக்கப்பெறும் 'குறிப்பு இலக்கத்தை' (Reference number) அஞ்சல் அலுவலகத்தில் வழங்கி உரிய தொகையை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை தங்களுடன் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும்.**

பணத்தை செலுத்திய பின்னர் பரீட்சைத் திணைக்கள உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் நுழைந்து உங்கள் விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும்.

கொடுப்பனவு பூர்த்தியடைந்த பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியிலுள்ள இணைப்பை (Link) செயற்படுத்துவதன் மூலம் உரிய விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும்.

5.2 வங்கி அட்டைகள் (Credit / Debit card) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by Credit / Debit card" நிகழ்ச்சியைத் தெரிவு செய்தல் வேண்டும். உரிய கொடுப்பனவை மேற்கொண்ட பின்னர் உங்கள் விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும்.

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கடட்ணம் (ரூபா) | 150/- | 200/- | 250/- | 350/- | 400/- |

மனைப்பொருளியல், பொறியியற் தொழில்நுட்பவியல், உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கு ரூபா 300/- வீதம் செய்முறைப் பரீட்சைக்காக செலுத்தப்படல் வேண்டும். இக்கட்டணமானது செய்முறைப் பரீட்சைக்கு அழைப்பு வரும்போது மாத்திரம் செலுத்தப்படுவதுடன் தற்போது இக்கொடுப்பனவுகளுடன் செலுத்தப்பட தேவையில்லை.

**06. "Download AL Exam 2021 - Application"** நிகழ்ச்சி மூலமாக உங்களது விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். அதனை அச்சுப் பிரதி செய்து தங்களுடன் வைத்துக் கொள்ளவும்.

## 07. விண்ணப்பப்படிவத்தை நிராகரித்தல்:

1. அரசாங்க பாடசாலையொன்றின் விடுகைப் பத்திரம் பெற்ற அல்லது தனியார் பாடசாலையொன்றிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் மட்டுமே தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாகக் கருதப்படுவர். பாடசாலையில் கற்றுக்கொண்டு, எவரேனும் தனிப்பட்ட விண்ணப்பதாரியாக பரீட்சைக்குத் தோற்றுவது தடைசெய்யப்பட்டுள்ளது. எந்தவொரு பாடசாலை மாணவராயினும் தனிப்பட்ட முறையில் பரீட்சைக்கு தோற்றுவது குற்றம் என்பதுடன் அவ்வாறான பரீட்சார்த்திகளுக்கு எதிர்காலத்தில் பரீட்சைகளுக்குத் தோற்றத் தடை விதிக்கப்படும்.
2. தற்கால வதிவிட முகவரியையோ, சர்வதேச பாடசாலையின் முகவரிகளையோ, குறிப்பிட்டிருக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

### பாடப்பட்டியல்

| பாடம் | பாட எண். |
|---|---|
| பௌதிகவியல் | 01 |
| இரசாயனவியல் | 02 |
| கணிதம் | 07 |
| விவசாய விஞ்ஞானம் | 08 |
| உயிரியல் | 09 |
| இணைந்த கணிதம் | 10 |
| உயர் கணிதம் | 11 |
| பொதுச் சாதாரண பரீட்சை | 12 |
| பொது ஆங்கிலம் | 13 |
| குடிசார்த் தொழில்நுட்பவியல் | 14 |
| பொறிமுறைத் தொழில்நுட்பவியல் | 15 |
| மின், இலத்திரன், தகவல் தொழில்நுட்பவியல் | 16 |
| உணவுத் தொழில்நுட்பவியல் | 17 |
| விவசாயத் தொழில்நுட்பவியல் | 18 |
| உயிர் வளத் தொழில்நுட்பவியல் | 19 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 20 |
| பொருளியல் | 21 |
| புவியியல் | 22 |
| அரசியல் விஞ்ஞானம் | 23 |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | 24 |
| இந்திய வரலாறு | 25A |
| ஐரோப்பிய வரலாறு | 25B |
| நவீன உலக வரலாறு | 25C |
| மனைப் பொருளியல் | 28 |
| தொடர்பாடல் ஊடகக்கற்கை | 29 |
| வணிகப் புள்ளிவிபரவியல் | 31 |
| வணிகக் கல்வி | 32 |
| கணக்கீடு | 33 |
| பௌத்த சமயம் | 41 |

| பாடம் | பாட எண். |
|---|---|
| பௌத்த நாகரிகம் | 45 |
| இந்து நாகரிகம் | 46 |
| இஸ்லாமிய நாகரிகம் | 47 |
| கிரேக்க உரோம நாகரிகம் | 48 |
| கிறிஸ்தவ நாகரிகம் | 49 |
| சித்திரக் கலை | 51 |
| நடனம் (தேசிய - கண்டி) | 52A |
| நடனம் (தேசிய - தாழ்நாட்டு) | 52B |
| நடனம் (தேசிய - சப்ரகமுவ) | 52C |
| நடனம் (பரதம்) | 53 |
| சங்கீதம் (கீழேத்தேயப்) | 54 |
| சங்கீதம் (கர்நாடகம்) | 55 |
| சங்கீதம் (மேலைத்தேயம்) | 56 |
| நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) | 57 |
| நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | 58 |
| நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) | 59 |
| பொறியியல் தொழில்நுட்பவியல் | 65 |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் | 66 |
| தொழில்நுட்வியலுக்கான விஞ்ஞானம் | 67 |
| சிங்களம் | 71 |
| தமிழ் | 72 |
| ஆங்கிலம் | 73 |
| பாளி | 74 |
| சமஸ்கிருதம் | 75 |
| அரபு | 78 |
| மலாய் | 79 |
| பிரெஞ்சு | 81 |
| ஜேர்மன் | 82 |
| ருசியன் | 83 |

# க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2021

## பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள்

### கொழும்பு மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| கொட்டாஞ்சேனை | 01 |
| மருதானை | 02 |
| பொரளை | 03 |
| மாளிகாவத்தை | 04 |
| கொலன்னாவ | 05 |
| கறுவாத்தோட்டம் | 06 |
| பம்பலப்பிட்டி | 07 |
| ஹவ்லொக்டவுண் | 08 |
| நுகேகொடை | 09 |
| கோட்டே | 10 |
| பத்தரமுல்ல | 11 |
| மொறட்டுவ | 12 |
| பிலியந்தலை | 13 |
| ஹோமாகம | 14 |
| மஹரகம | 15 |
| ஹங்வெல்ல | 16 |
| அவிசாவளை | 17 |

### கம்பஹா மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| நீர்கொழும்பு | 26 |
| சீதுவை | 27 |
| கொச்சிக்கடை | 28 |
| மினுவாங்கொடை | 29 |
| திவுலப்பிட்டிய | 30 |
| வெயங்கொடை | 31 |
| மீரிகம | 32 |
| கம்பஹா | 33 |
| கணேமுல்ல | 34 |
| நிட்டம்புவ | 35 |
| ஜா-எல | 36 |
| வத்தளை | 37 |
| றாகம | 38 |
| களனி | 39 |
| மஹர | 40 |
| தொம்பே | 41 |
| கிரிந்திவெல | 42 |

### களுத்துறை மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| ஹொரணை | 51 |
| புளத்சிங்கள | 52 |
| பாணந்துறை | 53 |
| பண்டாரகம | 54 |
| களுத்துறை | 55 |
| பேருவளை | 56 |
| மத்துகம | 57 |
| அகலவத்தை | 58 |
| கம்புறாவெல | 59 |
| அளுத்கம | 60 |

### மாத்தளை மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| மாத்தளை | 71 |
| கலேவெல | 72 |
| நாஉல | 73 |
| லக்கல-பள்ளேகம | 74 |
| தம்புள்ள | 75 |

### கண்டி மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| கண்டி | 81 |
| கடுகண்ணாவ | 82 |
| தெல்தோட்டை | 83 |
| தலாத்துஓய | 84 |
| பிலிமதலாவ | 85 |
| கட்டுகஸ்தோட்டை | 86 |
| தெல்தெனிய | 87 |
| வத்தேகம | 88 |
| உடுதும்பற | 89 |
| பூஜாப்பிட்டிய | 90 |
| ஹசலக | 91 |
| நுகவெல | 92 |
| கலகெதர | 93 |
| கம்பளை | 94 |
| நாவலப்பிட்டி | 95 |
| அலவத்துகொட | 96 |
| அக்குறண | 97 |
| பேராதெனிய | 98 |

### நுவரெலியா மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| ஹெதுனுவெவ | 101 |
| நுவரெலியா | 102 |
| வதுமுல்ல | 103 |
| ஹற்றன் | 104 |
| கினிகத்ஹேன | 105 |
| ஹங்குரன்கெத்த | 106 |
| மஸ்கெலிய | 107 |
| தலவாக்கலை | 108 |
| கொத்மலை | 109 |
| வலப்பனை | 110 |

### காலி மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| அம்பலாங்கொடை | 111 |
| பலப்பிட்டிய | 112 |
| கரந்தெனிய | 113 |
| காலி | 114 |
| ஹபராதுவ | 115 |
| தவளம | 116 |
| பத்தேகம | 117 |
| எல்பிட்டிய | 118 |
| நாகொட | 119 |
| பெந்தோட்ட | 120 |
| ஹிந்தோட்டை | 121 |
| அஹங்கம | 122 |
| உணவடுண | 123 |
| உடுகம | 124 |

### மாத்தறை மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| வெலிகம | 125 |
| மாத்தறை | 126 |
| கம்புறுப்பிட்டிய | 127 |
| ஹக்மன | 128 |
| தெய்யந்தர | 129 |
| தெவிநுவர | 130 |
| திக்வெல்ல | 131 |
| அக்குரஸ்ஸ | 132 |
| கொட்டப்பொல | 133 |
| தெனியாய | 134 |

### ஹம்பாந்தோட்டை மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| பெலியத்த | 141 |
| கெற்றமான | 142 |
| வலஸ்முல்ல | 143 |
| கட்டுவன | 144 |
| வீரகெற்றிய | 145 |
| தங்காலை | 146 |
| நாக்குளுகமுவ | 147 |
| அம்பலாந்தோட்டை | 148 |
| அங்குனகொலபெலஸ்ஸ | 149 |
| ஹுங்கம | 150 |
| ஹம்பாந்தோட்டை | 151 |
| திஸ்ஸமஹராம | 152 |
| லுணுகம்வெஹர | 153 |
| சூரியவெவ | 154 |

### யாழ்ப்பாண மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| சாவகச்சேரி | 161 |
| யாழ்ப்பாணம் | 162 |
| நெடுந்தீவு | 163 |
| கோப்பாய் | 164 |
| கரவெட்டி | 165 |
| தெல்லிப்பளை | 166 |
| பருத்தித்துறை | 167 |

### கிளிநொச்சி மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| கிளிநொச்சி | 171 |
| பளை | 172 |

### மன்னார் மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| மன்னார் | 176 |
| முருங்கன் | 177 |
| மடு | 178 |

### முல்லைத்தீவு மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| முல்லைத்தீவு | 186 |
| முள்ளியவளை | 187 |
| புதுக்குடியிருப்பு | 188 |
| மல்லாவி | 189 |
| யோகபுரம் | 190 |

### வவுனியா மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| வவுனியா | 196 |
| ஓமந்தை | 197 |

### திருகோணமலை மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| கந்தளாய் | 206 |
| திருகோணமலை | 207 |
| மூதூர் | 208 |
| கிண்ணியா | 209 |
| புல்மோட்டை | 210 |

### மட்டக்களப்பு மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| மட்டக்களப்பு | 216 |
| ஏறாவூர் | 217 |
| காத்தான்குடி | 218 |
| வாழைச்சேனை | 219 |
| களுவாஞ்சிக்குடி | 220 |
| செங்கலடி | 221 |
| ஓட்டமாவடி | 222 |

### அம்பாறை மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| அம்பாறை | 231 |
| தமண | 232 |
| உஹண | 233 |
| தெஹியத்தகண்டிய | 234 |
| சேரங்கட | 235 |
| பொத்துவில் | 236 |
| கல்முனை | 237 |
| அக்கரைப்பற்று | 238 |
| சம்மாந்துறை | 239 |
| நிந்தவூர் | 240 |
| திருக்கோவில் | 241 |

### புத்தளம் மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| வென்னப்புவ | 251 |
| தங்கொட்டுவ | 252 |
| மாதம்பே | 253 |
| சிலாபம் | 254 |
| மாரவில | 255 |
| நாத்தாண்டிய | 256 |
| புத்தளம் | 257 |
| முந்தல் | 258 |
| ஆனைமடு | 259 |
| கற்பிட்டி | 260 |

### குருநாகல் மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| குளியாப்பிட்டிய | 266 |
| பிங்கிரிய | 267 |
| ஹெற்றிப்பொல | 268 |
| பன்னல | 269 |
| நாரம்மல | 270 |
| கிரிஉல்ல | 271 |
| பொல்கஹவலை | 272 |
| குருநாகலை | 273 |
| இப்பாகமுவ | 274 |
| தொடங்கஸ்லந்த | 275 |
| மொறதிஹ | 276 |
| மாவத்தகம | 277 |
| வாரியப்பொல | 278 |
| நிக்கவரெட்டிய | 279 |
| கொபெய்கனே | 280 |
| மாகோ | 281 |
| கல்கமுவ | 282 |
| அளவ்வ | 283 |

### அனுராதபுரம் மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| மதவாச்சி | 291 |
| பதவிபராக்கிரமபுர | 292 |
| கெக்கிராவ | 293 |
| கல்னாவ | 294 |
| அனுராதபுரம் | 295 |
| கலென்பிந்துனுவெவ | 296 |
| கஹடகஸ்திகிலிய | 297 |
| நொச்சியாகம | 298 |
| தம்புத்தேகம | 299 |
| ஹெப்பிட்டிகொல்லாவ | 300 |
| ரம்பாவ | 301 |
| மிஹிந்தலை | 302 |
| ஹொரவுபதான | 303 |
| பதவிய | 304 |

### பொலன்னறுவை மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| பொலன்னறுவை | 306 |
| ஹிங்குறக்கொட | 307 |
| மன்னம்பிட்டிய | 308 |
| பகமூன | 309 |
| மெதிரிகிரிய | 310 |
| கிரிதலே | 311 |

### பதுளை மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| பண்டாரவளை | 316 |
| ஹல்துமுல்ல | 317 |
| வெலிமடை | 318 |
| பதுளை | 319 |
| பசறை | 320 |
| மஹியங்கனை | 321 |
| கிராந்துருகோட்டை | 322 |
| ஹாலி-எல | 323 |
| அபகஸ்தோவ | 324 |

### மொனராகலை மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| பிபிலை | 331 |
| மொனராகலை | 332 |
| வெள்ளவாய | 333 |
| படல்கும்புற | 334 |
| புத்தள | 335 |

### கேகாலை மாவட்டம்

| நகரம் | நகர எண். |
|---|---|
| கேகாலை | 341 |
| தெரணியகலை | 342 |
| தெஹியோவிட்ட | 343 |
| றம்புக்கன | 344 |
| மாவனெல்ல | 345 |
| வரக்காபொல | 346 |
| ஹெம்மாத்தகம | 347 |
| அரநாயக்க | 348 |
| ருவன்வெல்ல | 349 |
| எட்டியாந்தோட்டை | 350 |

### இரத்தினபுரி மாவட்டம்

| | |
|---|---|
| எஹலியகொட | 356 |
| இரத்தினபுரி | 357 |
| பெல்மதுல்ல | 358 |
| கொடக்கவெல | 359 |
| பலாங்கொட | 360 |
| கலவான | 361 |
| நிவித்திகல | 362 |
| எம்பிலிபிட்டிய | 363 |